17th August 1963]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் : கனம் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் ப்ளெயின்ஸில் வைக்கக்கூடிய மரங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறுர் என்று நினைக்கிறேன். அவற்றி லிருந்து அதிகமாகத் தைலம் எதிர்பார்க்க முடியாது. விறகை உத்தேசித்துத்தான் அவற்றை அதிகமாக நடுகிறேம்.

சினிமாப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படும் பொது இடங்கள்

* 187 கேள்வி.—திரு. கே. மூக்கையா தேவர் (திரு. ஆ. கு. சுப்பையா சார்பாக) : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் சினிமாப்படம் எடுக்க வாடகைக்கு விடப்படும் பிரதேசங்கள் எவை எவை?

(இ) இப்போது எவ்வளவு வாடகை வாங்கப்படுகிறது?

(உ) அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) தற்போது வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களின்படி, தனிப்பட்ட அமைப்புக்களால் சினிமாபடம் எடுக்க அனுமதிக்கப்பட்டுள்ள அரசாங்கக் கட்டிடங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் பட்டியல்[a] சபை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம், ஐயா. தற்போது நாள் ஒன்றுக்கு ரூபாய் 10 வீதம் கட்டணம் வசூலிக்கப்படும் இடங்களில், கட்டணத் தொகையை அதிகரிப்பதற்கான யோசனைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் இந்த மேஜை மீது வைத்திருக்கும் ஏடுகளில், உதகையில் உள்ள பொடானிகல் கார்டன்சிலும், கூனூரில் இருக்கும் ஸிம்ஸ் பார்க்கிலும் படம் எடுப் பதற்கு 500 ரூபாய் தான் ஒரு நாளைக்கு வாங்குவதாகப் போட்டி ருக்கிறுர்கள். அழகான படங்களை எடுத்து லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிப்பதால் ஒரு நாளைக்கு 5,000 ரூபாய் என்று வசூலித்தால் நல்லதல்லவா?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்பொழுதிருக்கும் கட்ட ணத்தை உயர்த்துவதாக உத்தேசம் இல்லை.

Stopping of Mail trains at Morappur Station.

* 188 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state :

(*a*) whether the Government have taken steps to appraise the Central Government about the difficulties of the public by the non-stopping of the mail trains at Morappur Railway Station in Salem district; and

(*b*) if so, the results thereof ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

---

[a] Printed as Appendix II on pages 367–370 infra.